මහජන බැංකුව | மக்கள் வங்கி

PEOPLE'S BANK

# கேள்விப்பத்திர அறிவித்தல்

**மக்கள் வங்கியினால் தலைமை அலுவலக திணைக்களங்களுக்காக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள சேவைகளைப் பெற்றுக்கொள்ளுவதற்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட வழங்குநர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றது.**

| **கேள்விப்பத்திர இலக்கம்** | **பொருள் பற்றிய விபரம்** | **விலைகூறல் பிணைப்பொறுப்பு முறியின் பெறுமதி** | **விண்ணப்பம் திறக்கப்படும் திகதி மற்றும் நேரம்** |
|---|---|---|---|
| P-067/2025 | வெளி கம்பனியொன்றின் ஊடாக தொழிலாளர் சேவைகளைப் பெற்றுக்கொள்ளுவதற்காக விலை விபரங்களைக் கோருதல் - 2025/2027 | வருடாந்த மொத்த மதிப்பிடப்பட்ட பெறுமதியில் 3% (ரூ.மில். 5.0இற்கு மேற்பட்டால்) | 2025.05.21ஆம் திகதி பி.ப. 2.00 மணி |

**ஏனைய நிபந்தனைகள்**

1. கேள்விப்பத்திர விண்ணப்பங்களை **2025.04.30ஆம் திகதி முதல் 2025.05.20ஆம் திகதி வரை** வங்கி வேலை நாட்களில் **மு.ப. 9.00 மணி முதல் பி.ப 2.00 மணி வரை** இல: 30.:.101, கியூ வீதி, கொழும்பு 02 என்ற முகவரியில் அமைந்துள்ள மக்கள் வங்கியின் வழங்கல் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன், கேள்விப்பத்திர விண்ணப்பத்திற்காக **ரூ. 5,000/-** மீளச் செலுத்தப்படாத கட்டணத்துடன் குறித்த நிறுவனத்தின் விண்ணப்ப கடிதமொன்றையும் மக்கள் வங்கி, வழங்கல் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

2. தகுந்தவாறு தயாரிக்கப்பட்ட கேள்விப்பத்திரத்துடன் கேள்விப்பத்திரத்தின் வருடாந்த மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 5.00 மில்லியனுக்கு மேற்படுமாக இருந்தால், மதிப்பிடப்பட்ட பெறுமதியில் 3% பெறுமதியினைக் கொண்ட விலைகூறல் பிணைப்பொறுப்பு முறியொன்றை ஏற்றுக்கொள்ளப்பட்ட வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெற்று சமர்ப்பிக்க வேண்டியதோடு, அது கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியிலிருந்து 180 நாட்களுக்குச் செல்லுபடியானதாக இருக்க வேண்டும். இதற்காக 180 நாட்களுக்குச் செல்லுபடியான வங்கி கொடுப்பனவு கட்டளையொன்றை அல்லது வங்கி வரைவை சமர்ப்பிக்க முடியும். தனிப்பட்ட காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. மக்கள் வங்கியின் எந்தவொரு விதத்திலான கணக்கொன்றில் பண வடிவில் உள்ள வைப்புத் தொகை மற்றும் அதற்கு உரியதாக எதிரீடு செய்யும் கடிதமாக இருந்தாலும் பிணைப்பொறுப்பு முறியாக ஏற்றுக்கொள்ள முடியும்.

3. மேலே அட்டவணையில் காட்டப்பட்டுள்ள திகதியன்று பி.ப. 2.00 மணிக்கு கேள்விப்பத்திரம் திறக்கப்படுவதோடு, அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் முத்திரை இடப்பட்டு தயாரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை மக்கள் வங்கி, வழங்கல் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திர பெட்டியில் இட வேண்டும். இன்றேல் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். அந்த நேரத்தின் பின்னர் கிடைக்கும் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படாமலே நிராகரிக்கப்படும்.

4. அனைத்து அல்லது எந்தவொரு கேள்விப்பத்திரத்தையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அல்லது எவ்வித காரணமும் காட்டாமல் கேள்விப்பத்திரமொன்றின் எந்தவொரு பகுதியையும் ஏற்றுக்கொள்ளும் உரிமை மக்கள் வங்கிக்கு உண்டு.

5. இது தொடர்பான மேலதிக விபரங்களை பின்வரும் தொலைபேசி இலக்கங்கள் ஊடாக பிரதம முகாமையாளர், (வழங்கல்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

**பிரதம முகாமையாளர் (வழங்கல்)**
**மக்கள் வங்கி,**
**வழங்கல் திணைக்களம்,**
**30/101, கியு வீதி, கொழும்பு 02.**

**தொலைபேசி இலக்கம் : 2439577, 2439578**
**தொலைநகல் இலக்கம் : 2439576**
**இணையத்தளம் : www.peoplesbank.lk**
**மின்னஞ்சல் : supplies@peoplesbank.l**